2018 ஜூன் 8]

அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நூலகங்களிலே வாசகர்களை சேர்ப்பது தொடர்பாக இந்த அரசு இந்த ஆண்டு 3 இலட்சம் பேர் என்று இலக்கு வைத்திருக்கிறது. ஒரே மாத காலத்தில் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் பேர் பல்வேறு நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்களின் புனிதப் பெயரால் இருக்கின்ற நூலகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்ற ஒரு கருத்தையும் உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய அரசுதான் இன்றைக்கு இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அரசு, கிராமப்புற நூலகங்களைத் திறக்க சிறப்பான முறையில் செயலாற்றும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் புனிதப் பெயரில் இருக்கின்ற நூலகத்திற்கு இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, வரலாற்றை படைத்துக்கொண்டிருக்கிற ஓர் அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், நூலகங்களுக்கு நீங்கள் யார் வேண்டுமானாலும் சிறந்த நூல்களைத் தரலாம். அவற்றை அந்த நூலகங்கள் பயன்படுத்துவதற்கு அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எவ்வளவு புத்தகங்கள் வேண்டுமென்றாலும் நீங்கள் வழங்கலாம். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த நூல்களை அரசு நூலகங்களில் வைக்கலாம் என்பதைப் பரிசீலிக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. ஆகவே, நீங்கள் எவ்வளவு நூல்கள் வழங்கினாலும், அவற்றை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2018 ஜுன் 8*

152—

புதிய மின்மாற்றி

***20178—திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியில் 100* KVA *திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் ஏற்கெனவே 100* KVA *திறன் கொண்ட ஒரு மின்மாற்றி இருந்தது. அங்குள்ள மின்பளுவைக் கருத்தில்கொண்டு, அதை 250* KVA *திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றிக் கொடுத்திருக்கின்றோம். அதுதவிர, மேலும், 100* KVA *திறன் கொண்ட ஒரு மின்மாற்றி 8-1-2018 அன்று அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட உடனேயே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதைச் செய்து கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். கடம்பத்தூர் ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சிக்கு மேலும் ஒரு 100* KVA *திறன் கொண்ட மின்மாற்றியை அமைத்துக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல், இதே அவையில் ஏற்கனவே நான் பாப்பரம்பாக்கம் துணை மின் நிலையம் அமைக்கும் பணிபற்றி கேள்வி எழுப்பியிருந்தேன். அங்கு*

2018 ஜூன் 8]

எந்த அளவுக்கு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார்கள். பாப்பரம்பாக்கம் பணி என்பது ஏற்கெனவே இடப் பிரச்சினை காரணமாகத்தான் செய்ய முடியாமல் இருந்தது. இப்போது, அதற்கான இடம் கண்டறியப்பட்டு, அதற்கு* enter upon permission *கொடுக்கப்பட்டிருக்கிறது. டெண்டரும் விடப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவில் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 31-3-2019-க்குள் முடித்து, மின்பளு இல்லாமல் உறுப்பினர் குறிப்பிடும் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல், என்னுடைய திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பாண்டூர் ஊராட்சியிலுள்ள கனகவல்லிபுரத்தில் 230* KV *திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு மேய்க்கால் புறம்போக்கு நில எடுப்புப் பணிக்காக கிராமப் புல எண்கள் 262, 263, 264, 265 ஆகியவற்றில் மொத்தமுள்ள 10.81 எக்டர் நிலத்தில் 6.02 எக்டர் நிலத்தினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு துணை மின் நிலையம் அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய நில நிருவாக ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட கோப்பு 23-6-2017 அன்று சிறு, சிறு காரணங்களால் திருவள்ளூர் மாவட்ட வருவாய்த் துறைக்கு திருப்பி அனுப்பப்பட்டது. 20-7-2017 அன்று மாவட்ட ஆட்சியருக்கு அக்கோப்பின்மீது விரைந்து நடவடிக்கை எடுக்கக்கோரி நினைவூட்டுக் கடிதம் வழங்கினேன். திருவள்ளூர் மாவட்ட வருவாய்த் துறையின்மூலம் மீண்டும் 7-12-2017 அன்று நில நிருவாக ஆணையர் அவர்களுக்கு கோப்பில் உள்ள ஐயங்கள் சரி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பணிகளை விரைந்து முடித்து, விவசாயிகள் பயன்பெறும் வகையில்*

இந்த அரசு மேற்படி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மேலும், திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி, பிலிப்ஸ்புரம் என்ற கிராமத்தில், புதுமாவிலங்கை என்ற ஊராட்சியில் மின் கம்பிகள் குடிசைப் பகுதிகளுக்கிடையே தாழ்வாகச் செல்வதால், உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதேபோன்று, குடிசைகள் தீப்பற்றி எரியக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, அதை மாற்றி, underground cable அமைத்திட வேண்டுமென்று இந்த அரசைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோப்பு எந்தெந்த அலுவலகங்களுக்குச் சென்று வந்தது, தற்சமயம் எங்கு இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட்டார். ஒவ்வோர் அலுவலகமாகச் சென்று பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கின்றேன். மேய்க்கால் புறம்போக்கு நில ஒப்படைப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும். மேய்க்கால் புறம்போக்கு நில ஒப்படைப்பைப் பொறுத்தவரையில், நிலத்தை ஒப்படைப்பதில் காலதாமதம் ஆகின்றது, கோப்பு அரசு வரை வர வேண்டும். அந்த இடத்திற்கு மாற்று இடம் கொடுக்க வேண்டும். மாற்று இடத்தை நாம் ஆய்வு செய்து, வேறோர் இடத்தை ஒப்படைத்த பிறகுதான், மேய்க்கால் புறம்போக்கு இடத்தில் பணிகள் மேற்கொள்ள அனுமதி கிடைக்கும். இது நீண்ட நாள் கோரிக்கை. எனினும், வேகப்படுத்தி, அந்த இடத்தை உடனடியாக மின்சார வாரியத்திற்கு ஒப்படைத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் பணிகள் துவக்குவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிலிப்ஸ்புரம் கிராமத்தில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன; அதனால், குடிசைப் பகுதிகளில் தீப்பிடிக்கும் அபாயம் இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து நான் மானியக் கோரிக்கையில்

2018 ஜூன் 8]

சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், தாழ்வாக இருந்த, பழுதடைந்த 1 இலட்சத்து 66 ஆயிரம் மின்கம்பங்களெல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் மின் கம்பங்கள் தாழ்வாக இருந்து, மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்று தெரிவித்தால், இன்றையதினமே நான் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் தெரிவித்து, அதை ஆய்வு செய்யச் சொல்கிறேன். அப்படியிருந்தால், உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் பகுதி அதிக அளவில் தொழிலாளர்களும், தொழிற்சாலைகளும் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கிட்டத்தட்ட 1,750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த இடத்தில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். அந்தப் பகுதியில் போதுமான இடங்களும் உள்ளன. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருப்பூர் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். அங்குள்ள மின் பளுவிற்கு ஏற்ப, தேவையான அளவிற்கு துணை மின் நிலையங்கள்*

அமைக்கப்படுகின்றன. குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதால், அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதுமான இடமும் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். இடம் கிடைப்பதே அரிது. அதுவும் திருப்பூர் பகுதியில் இடம் கிடைப்பது என்பது மிகவும் அரிது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை உடனடியாகத் ஆய்வு செய்கிறோம். துணை மின் நிலையம் திருப்பூருக்குத் தேவைதான். ஆகவே, இடம் கிடைக்கும்பட்சத்தில், உடனடியாகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வள்ளுவர், தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூரில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குறைந்த மின்னழுத்தம் குறித்து மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, 65 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 1 டன் கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி துவங்கப்பட்டது. ஆனால், கடந்த 7 ஆண்டுகளாக அந்தப் பணி துரிதமாக நடைபெறாததாலும், பணி பாதியிலேயே நின்று போனதாலும், மின் தடையே, மின்வெட்டே இல்லாத ஊரில், தற்போது ஒரு நாளில் 10 முறை மின் தடை ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு, அந்த 1 டன் கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணியை உடனடியாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுத்து, மின் தட்டுப்பாட்டை நீக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 8]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால், அதிலே உள்ள உண்மைத் தன்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்காமல் விட்டுவிட்டார். அந்த இடம் ஜென்ம பூமியாக இருக்கின்ற காரணத்தினால், அதற்கு உச்ச நீதிமன்றத்திலே தடையாணை இருக்கின்றது. ஏற்கெனவே, அதற்கு பட்டா கொடுக்கக் கூடாது என்று தடை இருந்த காரணத்தினால், வருவாய்த் துறை, உச்ச நீதிமன்றத்திலே மனு செய்து, இப்போது பட்டா கொடுப்பதற்குண்டான ஏற்பாட்டை உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல்படி ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே இப்பொழுது நாங்களும் உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்கின்றோம். அந்தக் கிராமங்களுக்கெல்லாம் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்; சீரான மின்சாரம் தரவேண்டும். மின் கம்பங்கள் எல்லாம் போடப்பட்டு விட்டன. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதற்கு* wire *மட்டும் இழுக்க முடியாமல் இருக்கின்றது. ஆகையால் அதற்கு உச்ச நீதிமன்றத்தை நாடியிருக்கின்றோம். நீதிமன்ற ஆணை இதுவரை கிடைக்காமல் இருக்கிறது. உச்ச நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவொற்றியூர் தொகுதியில் இருக்கக்கூடிய, திருவொற்றியூர் பகுதியிலுள்ள மின்மாற்றிகள் பழைய மின்மாற்றிகளாக இருக்கின்ற காரணத்தால், அதன் மீது பறவைகள் உட்கார்ந்தால்கூட மின் தடை ஏற்படுகிறது. அதுமட்டுமல்லாமல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை பகுதியிலே இருமருங்கிலும் மெட்ரோ இரயில் திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், ஓரமாக இருக்கின்ற கேபிள்கள் பழுதடைந்துவிடுகின்றன. ஒரு நாளைக்கு 4 மணி நேரம், 5 மணி நேரம் மின்சாரம் தடைபடுகிறது. குறிப்பாக, நேற்றைய முன்தினம் காலை 10-00 மணியிலேயிருந்து மாலை 5-00 மணி வரை மின்சாரம் இல்லாமல் மிகுந்த வேதனையடைந்து, நான் சட்டமன்றக் கூட்டம்*

முடிந்து வீட்டுக்குச் செல்கின்ற நேரத்தில், அனைவரும் current இல்லை, current இல்லை என்று தொலைபேசியிலே தொடர்பு கொண்டு எனக்குச் சொன்னது, என்னுடைய காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதைப்போல இருந்தது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருவொற்றியூர் தொகுதிக்கு தடையில்லாமல் மின்சாரம் கிடைக்க வழிவகை செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2011-ல் அவர் அமைச்சராக இருந்தபோதும் அதுமாதிரி தொலைபேசி அழைப்பு அவருக்கு வந்திருக்கும்; அதுபோல் அவரது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோல் இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால் அதுபோன்று தொலைபேசிச் செய்தி இல்லை, மின் தடை ஏற்படுகிறதென்ற தகவலே கிடையாது. தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின் மிகை மாநிலமாகத்தான் தொடர்ந்து இன்றளவும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது correct தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்குப் பின்னால் சொன்னதுதான் தவறு. ஏதோ காலை 10-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரை மின்சாரம் இல்லை என்று அவர் சொன்னார். அதற்கான காரணத்தையும் அவரே சொல்லிவிட்டார். அங்கே பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படிப் பணிகள் நடைபெறுகின்றபோது cable damage ஆகியிருக்கிறது என்று நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். Cable damage ஆகிவிட்டதென்று சொன்னால், உடனடியாக எந்த இடத்தில் பழுதாகியிருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்குண்டான அந்தக் கருவி இப்போதுதான் நமக்கு வந்திருக்கின்றது. ஆகையால், அதை ஒவ்வொரு பகுதியாகத் தோண்டி எடுத்துப் பார்க்க வேண்டியிருப்பதால் அதற்கு காலதாமதம் ஆகும். ஆக, அதுபோன்று ஒவ்வொரு துறையின் சார்பாக சாலையைத் தோண்டி பணிகள் செய்கின்றபோதும், இதுமாதிரி பிரச்சினை வரும். சென்னை மாநகரிலே இதுதான் மிகப் பெரிய பிரச்சினை. UG cable வேண்டுமென்று எல்லோரும் கேட்கின்றார்கள். ஆனால்,

2018 ஜூன் 8]

நடப்பது என்னவென்று சொன்னால், Metro Water *ஊழியர்கள் ஒரு பக்கம் வேலை செய்கின்றார்கள்,* Telephone Department *ஊழியர்கள் ஒரு பக்கம் வேலை செய்கின்றார்கள், தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் ஒருபக்கம் வேலை செய்கின்றார்கள். நமது* cable *செல்கின்ற பகுதியில் அவர்கள் பணியாற்றும்போது அந்த* cable-*ஐப் பழுதாக்கிவிட்டுச் சென்றுவிடுகின்றார்கள். அது எந்த இடத்தில் பழுதாகியுள்ளது என்பதைக் கண்டுபிடித்து, நாங்கள் அதைச் சரி செய்வதற்குள் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. அது மின் தடைதானேயொழிய, மின்வெட்டு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மின்மாற்றியைப் பொறுத்தவரையில் இப்பொழுது இரண்டு ஆண்டுக் காலமாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்த காரணத்தினால் மின்மாற்றியே வாங்க முடியாமல் இருந்தது. ஒரு மாத காலத்திற்கு முன்பாகத்தான் அந்தத் தடையாணை நீக்கப்பட்டு, இப்பொழுது மின்மாற்றிகள் வாங்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது மின்மாற்றியின் தேவை அதிகமாகிவிட்ட காரணத்தினால், மின்மாற்றி கிடைப்பது கொஞ்சம் அரிதாக இருக்கின்றது. அதிலும் இன்னொரு தகவலைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஸ்டெர்லைட் ஆலையிலிருந்துதான் காப்பர் வந்துகொண்டிருந்தது. கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் 70 சதவிகிதம் மின் மாற்றிகளுக்கு அவர்கள்தான் காப்பரை* supply *செய்து வந்தார்கள். அந்த ஆலை நிறுத்தப்பட்ட காரணத்தினால் இப்போது நாம் வேறு ஒரு பக்கத்திலிருந்து காப்பரை வாங்குவதற்குண்டான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அதனால் சிறிது காலதாமதம் ஆகின்றது. அதனால், மின் மாற்றிகள் எங்கெங்கு தேவையிருக்கின்றனவோ அங்கெல்லாம் உடனடியாக மாற்றிக்கொடுக்கப்படும். ரோடு பணிகள் செய்கின்றபோது மின்சார வாரியத்திற்குத் தகவல் சொல்லிவிட்டார்களென்று சொன்னால், அந்த இடத்தில்* cable *இருக்கிறதென்று நாங்கள் அவர்களுக்கு அறிவிப்போம். அவர்கள் அந்த இடத்தில் வேலை செய்கின்றபோது, இந்தப் பழுது ஏற்படாமல் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதியில் இதுபோன்று பணிகள் நடைபெறுகின்றபோது அருகில் இருக்கின்ற மின்சார வாரியத்திற்கு தகவல் சொல்வார்களென்று சொன்னால், மின்வாரிய ஊழியர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று, அந்தப் பகுதியிலே* cable *செல்லும் இடத்தைக் காண்பித்து கவனமாக பணி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு வருவார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அது மின்*

தடைதானேயொழிய, மின் வெட்டு எப்பொழுதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சி நடத்தி வரும் எங்களுடைய மண்ணின் மைந்தர், மக்கள் தலைவர், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

சேலம் மேற்கு தொகுதி, மாநகராட்சிக்குச் சொந்தமான 18-வது கோட்டம், மெய்யனூர் பகுதியிலே தேவைக்கேற்ப நிலங்கள் இருக்கின்றன. மாநகராட்சியினுடைய பொறியாளர் அவர்களும் அந்த இடத்திற்குச் சென்று, துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆய்வை மேற்கொண்டு, மாநகராட்சியினுடைய ஆணையாளர் அவர்களிடத்திலே ஒப்புதலையும் பெற்று, மின்சார வாரியத்தினுடைய பொறியாளர் அவர்கள் மதிப்பீடும் தயாரித்து, அரசுக்கு அந்த மதிப்பீட்டை அனுப்பி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை, அங்கே துணை மின் நிலையம் அமைக்க நிதியொதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டு, அதைச் செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை, கடந்த வாரம் என்னிடத்திலே வந்து அதிகாரிகள்

2018 ஜூன் 8]

சொல்லி, ஆய்வு செய்துவிட்டுச் சென்றார்கள். அந்த இடத்திற்கு இப்பொழுது அரசினுடைய அனுமதி பெறுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு விதி 110-ன்கீழ், 132 துணை மின் நிலையங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதற்குண்டான இடங்கள் கிடைக்கின்றபோது, முன்னுரிமை அடிப்படையிலே அந்தத் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரப்படும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதியை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அந்த இடம் கிடைத்தவுடன், பணிகள் தொடங்கப்படும். பொதுவாக, துணை மின் நிலையம் 230 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 110 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 33/11 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 8 மாதத்திலிருந்து 10 மாதத்திற்குள் வேகமாக அந்த வேலைகளை முடிக்கின்ற அளவுக்கு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தை உடனடியாக ஒப்படைக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு, இடம் ஒப்படைத்தவுடன், அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

தார்ச் சாலை அமைத்தல்

***3038—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம்-நடுவீரன்பட்டு ஒன்றியச் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?